முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1547

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சொரூபமே அரங்கா
ஞானிகள் படைகொண்ட தேசிகா
வானவர்கள் போற்றுகின்ற அரங்கா
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 08 ம் நாள், 24.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஆசியதும் அரங்கனுக்கு சுப்ரமணியர் யானும்
ஆற்றலாக நித்தம் நித்தம் சூட்சும தீட்சை
3. வரமென தொடர்ந்து தந்துவர
வையகத்தில் அன்னதனால் உலக மக்கள்
வணங்கி அரங்கன் குடிலை நாடி
வேலவன் என் சக்திமிகு தீட்சை தன்னை
4. வெளிப்படையாக திருவடி ஞான
மகா மந்திர தீட்சையாக
ஆகவே ஏற்று உலகோர் அடிபணிந்து
அனுதினம் பூஜித்து வருதல் காண
5. காணவே உண்மைபட அரங்கன் வழி
கண்ணியமோடு சன்மார்க்க நெறி பின்பற்றி
ஞானம் பயிலும் அனைவருக்கும்
ஞானபண்டிதன் என் காட்சி சயனவழியும் சூட்சும வழியும் உண்டுஉண்டு
6. உண்டான அரங்கன் தொடர்பு கூட்டி
உலகோர் ஞானம் பயின்றால் போதும்
கண்டுரைக்க இந்த கலியுகமே
கணக்காக கந்தவேலன் என்னருளாலே

7. அருளாலே ஞானயுகமாக மாற்றம் கண்டு
அகிலத்தில் ஞான ஆட்சிக்காலம்
பெருமைபட அரங்கனால் அரங்கேறும்
பிசகின்றி அரங்கன் தொண்டர்களால் இந்த அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–